9th November 1966]

அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து என்ன முடிவு செய்திருக்கிறது, என்ன ஏற்பாடுகள் செய்யும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வரி விலக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு இந்த சொஸைடி களின் வருமானம் அதிகரிக்கும். அம்மாதிரி வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக, சற்றேறக்குறைய 10 ஆண்டு களாக மத்திய சர்க்காரிடம் நாம் எடுத்துச் சொல்லி வந்திருக் கிறோம். சில சலுகைகள் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 'ஸி' பிரிவிலே இருக்கக்கூடிய சில சலுகைகள் கொடுத்திருக் கிறார்கள். ஆனால் இந்தச் சலுகைகள் போதாமல் இருக்கின்றன. ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் அதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கோருகிற அளவுக்கு மத்திய அரசாங்கம் இந்தச் சலுகைகளை வழங்குகின்ற வரையிலாயினும், இதுபோன்று வட்டியை வெய்வ் செய்வதற்கு தற்காலிகமாகவாவது ஏற்பாடு செய்வது பற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் நாம் கையினால் செய்கிற தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி கிடையாது என்ற பெரிய சலுகையை கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு என்ன சலுகை கொடுப்பது என்று புரியவில்லை.

Dearness allowance

* 542 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the orders revising the rates of D.A. issued in G.O. Ms. No. 590, Finance, dated 24th May 1966 have been extended to the teaching and non-teaching staff of polytechnics under private bodies ?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes.

திரு. செ. மாதவன் : அண்மையில் மத்திய சர்க்கார் பொதுவாக அகவிலைப்படியை ஏற்றுவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாநில சர்க்காரும் அதுபோன்று அகவிலைப் படியை உயர்த்த முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும்படியான விஷயம். இப்பொழுது பாலிடெக்னிக்ஸ் பற்றித்தான் கேள்வி போடப்பட்டிருக்கிறது. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும், இதர அரசாங்க சிப்பந்திகளுக்கும், இப் பொழுது விலைவாசி விஷம் போல் உயர்ந்திருப்பதன் காரணமாக,

ஏற்கனவே உள்ள 'டி.ஏ'-யையும், சம்பளத்தையும் மீண்டும் பரிசீலனை செய்து உயர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி கல்வி அமைச்சருமாகிய முதல் அமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : பாலிடெக்னிக்ஸ் பிரைவேட் இன்ஸ்டிடியூஷன்ஸ்க்கு இந்த உத்தரவு பொருந்தாது என்று அவர்கள் அதைப்பின்பற்றவில்லை என்று சொல்கிறார்கள். அதுவும் தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய டெக்ஸ்டைல் கோர்சுக்கு இந்த உத்தரவு அமல்படுத்தப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நம்முடைய அரசாங்கம் கவனித்து, அரசாங்கப் பள்ளிகளில் இருப்பதுபோல், அவர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்திக் கொடுக்க முன்வரும்படி ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி 'டீச்சிங் ஸ்டாப், நான்-டீச்சிங் ஸ்டாப்'-களுக்கு இந்த உத்தரவை எக்ஸ்டெண்டு பண்ணுவது பற்றியது. சமீபத்தில் 27-10-1966-ல் அதிகரித்தோம். மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

Industrial Training Centre

* 543 *Q.*—Sri R. S. ARUMUGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the same person is holding the post of the Principal, Stree Seva Mandir and the Principal, Industrial Training Centre for Women, Thiyagarayanagar, Madras ;

(*b*) whether any complaints have been received recently that the work in the Industrial Training Centre is affected because of this; and

(*c*) whether there is any proposal to appoint a separate Principal for the Industrial Training Centre for Women ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The Principal of the Industrial Training Centre for Women is the Vice-President and Correspondent of the Stree Seva Mandir. There is no such post as Principal in the Stree Seva Mandir.

(*b*) No.

(*c*) No.

Raw materials

* 544 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardship caused to and the serious crisis arisen in the stainless steel industry due to want of raw materials ; and

(*b*) if so, the action proposed thereon?